## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை இன்ஸ்டியூட் ஒப் பயோ டெக்னொலஜி (தனியார்) கம்பனியின் ''கம்பனி'' 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு | i. நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதிவரை கூட நிறுவனமானது வரைவு ஆண்டறிக்கையினை சமரப்பித்திருக்கவில்லை.<br>ii. நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் வருடாந்த ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை கணக்காய்வு திகதிவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | SLIBTEC ஆனது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டரிக்கைகளை மதிப்பீட்டிற்காக அமைச்சிற்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. அதன் சமர்ப்பிப்பிற்காக அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுமுள்ளது. மிகுதி அறிக்கைகள் அமைச்சினால் மதிப்பீட்டில் உள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 132,380,612 ஆன நட்டம் ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 181,293,005 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 48,912,393 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் வருமானம் ரூபா 3,558,859 ஆல் குறைந்திருந்தாலும்,

செயற்பாட்டு வருமானம் ரூபா 31,004,602 இனால் அதிகரித்தும் நிர்வாகச் செலவுகள் ரூபா 22,491,186 இனால் குறைவடைந்தும் இருந்தது, இதுவே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டிற்காக பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் முறையான ஆராய்ச்சித் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இக் கவனக்குறைவானது தெளிவான நோக்கங்களினை நிர்னயித்தல், வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்தல் மற்றும் ஆராய்ச்சி செயலாற்றலினை மதிப்பிடல் போன்றனவற்றிலுள்ள இயலுமையினை தடைசெய்திருந்தது. | ஆராய்ச்சிக் குழுவின் வழிகாட்டுதலின் பிரகாரம், குழுவின் தேவைப்பாடுளின் அடிப்படையில் செயற்திட்டத்தின் ஒவ்வொரு ஆராய்ச்சி செயலாற்றலினையும் மதிப்பீடு செய்ய 2024 ஆம் ஆண்டிற்காக SLIBTEC ஆனது ஓர் ஆராய்ச்சித் திட்டத்தினை தயாரித்துள்ளது. அதற்கு மேலதிகமாக, 2025 ஆம் ஆண்டிற்காக ஓர் விபரமான ஆராய்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சபையானது ஆராய்ச்சித் திட்டத்தினை அங்கீகரித்து திட்டத்தின் அமுல்படுத்தலினை கண்கானிக்கவும் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 இல், கம்பனியானது ரூபா 44,701,020 ஆன ஓர் கணிசமான செலவினை உள்துறை வடிவமைப்பு மற்றும் தளபாட பெறுகை என்பனவற்றின் மீது செய்திருந்தது. இருப்பினும், தளபாடத்தின் ஓர் குறிப்பிட்ட பகுதி பயன்படுத்தாமல் கனப்படுகின்றது. பெறுகை நேரத்தின் போது, ஓர் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான ஆய்வுகூடங்கள் மாத்திரம் | உட்கட்டமைப்பு மற்றும் தளபாடங்கள் மீதான செலவானது உயர் தகுதிவாய்ந்த தொழில் வல்லுனர்களை ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் மற்றும் ஓர் உகந்த வேலைச் சூழலை உருவாக்குவதற்குமான ஓர் தந்திரோபாயத் தீர்மானமாக இருந்தது. வணிக தலைவர்கள் மற்றும் சர்வதேச முகவர்களுடன் ஈடுபடும் ஓர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி | விளைவற்ற வளங்களினை தவிர்க்கவும் நிதிகளின் வினைத்திறனான பயன்பாட்டை உறுதிப்படுத்தவும் ஓர் விபரமான தேவைகளின் மதிப்பீடு மற்றும் கட்டம் கட்டமான பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாட்டில் இருந்தன, அதேநேரம் இன்னும் பல பூர்த்திசெய்யப்படாமலும் செயற்பாடற்றும் காணப்பட்டன. இந் நிலைமையானது வளங்களினை முன்னுரிமைப்படுத்தல் மற்றும் கம்பனியின் திட்டமிடல் செயலாற்றலின் வினைத்திறன் என்பன குறித்து கடுமையான கவலைகளை உருவாக்குகின்றது. | என்றவகையில், தாமதமடைந்த ADB மானியங்களினை பயன்படுத்தி ஆய்வு கூடங்களை அபிவிருத்தி செய்ய முன்னர் திறமையான நபர்களை ஆட்சேர்ப்புச் செய்ய SLIBTEC முன்னுரிமை அளித்திருந்தது. சில பகுதிகளில், கணினிகள் மற்றும் மாணவர் வேலைநிலையங்கள் போன்றன ஏற்கனவே செயற்படுகின்றது, அதேநேரம் ஏனையவைகள் விசேடத்துவம் பெற்ற ஊழியர்கள் மற்றும் உபகரணங்களிற்காக காத்திருக்கின்றன. கிரிஸ்பர் பகுதியானது கூட்டங்கள் மற்றும் முதலீட்டாளர் ஈடுபாடு என்பனவற்றிற்காக வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது. SLIBTEC இன் சர்வதேச ஒத்துழைப்புக்கள் மற்றும் ICGEB இன் ஓர் பிராந்திய ஆராய்ச்சி நிலையமாக அங்கீகாரம் பெற்றுள்ள நிலையில், உயர் உட்கட்டமைப்பு நியமங்களினைப் பேனுவது கட்டாயமாகும். எனவே, தொடர்புடைய செலவினங்களானது பயன்படுத்தாத செலவினங்கள் என்பதைவிட நீண்ட கால தந்திரோபாய முதலீட்டை பிரதிபலிக்கின்றது. | வேண்டும். |
| (ஆ) | கம்பனியானது 2023 இல் ரூபா 120,989,136 கிரயத்தில் அடுத்த தலைமுறை வரிசைமுறை (NGS) முறைமையினை கொள்வனவு செய்திருந்தது. உயர் உற்பத்தியனைக் கொண்ட DNA மற்றும் RNA வரிசைப்படுத்தலிற்காக அதன் மேம்பட்ட திறன்கள் இருந்போதிலும், 2025 ஒகஸ்ட் 31 இலான கணக்காய்வுத் திகதிவரை உபகரணமானது பயன்படுத்தப்படாமல் | SLIBTEC ஆனது டெங்கு மற்றும் ஜிகா வைரஸ் மரபணு தொடர்பாக 2025 இல் வரவிருக்கும் ஆராய்ச்சிகளிற்காக அவ் உபகரணங்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதுடன் தொடர்புடைய செயற்திட்டங்களிற்கு பங்களிப்புச் செய்வதற்காக NIH, வெல்கம் டிரஸ்ட் மற்றும் IBRO போன்ற பிரதான சர்வதேச மானியங்களிற்காகவும் விண்ணப்பித்துள்ளது. உள்நாட்டு பல்கலைக்கழகங்களிற்கு எக்ஸோம் வரிசைமுறை சேவைகளை வழங்குதல், | உட்கட்டமைப்பு வரையரைகளை நிபர்த்தி செய்வதனூடாக ஆய்வுகூட வசதிகளின் இடையூரின்றிய செயற்பாட்டினை உறுதி செய்ய கம்பனியானது தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| காணப்படுகின்றது, இது மந்தகதியான தந்திரோபாய திட்டமிடல் மற்றும் விடாமுயற்சியின்மை என்பவற்றை பிரதிபலிக்கின்றது. | உயர்தர வரிசைப்படுத்தல் செயற்திட்டங்கள் மீதான சர்வதேச பங்குதாரர்களுடன் ஒத்துழைத்தல் மற்றும் 2026 இல் ஆரம்பிக்கப்படும் பூகோல பயோஜெனோம் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் போன்றனவற்றினை எதிர்கால திட்டமானது உள்ளடக்குகின்றது.<br>24/7 குளிரூட்டல் இல்லாமையானது இந் நிலையத்தில் இடையூரின்றிய சேவையினை வழங்கும் SLIBTEC இன் ஆற்றலினை தொடர்ந்தும் பாதித்து வருகின்றது. |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் ஓர் ‘‘முதன்மை பெறுகைதிட்டம்’’ ஆனது மூன்று வருடங்களான ஓர் காப்பகுதிக்காக தயாரிக்கப்படல் வேண்டும். இருப்பினும் கம்பனியானது அதனது பெறுகை செயற்பாடுகளை குறிப்பிட்டு ஓர் ‘‘முதன்மை பெறுகைதிட்டம்’’ இணை தயார்த்திருக்கவில்லை. | அடுத்த ஆண்டிலிருந்து மூன்று வருடங்களான ஓர் காலப்பகுதிக்காக ஓர் முதன்மை பெறுகைதிட்டத்தினை தயாரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | ஓர் முதன்மை பெறுகைத்திட்டமானது தயாரிக்கப்பட்டு முறையாக அனுமதிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை நேர அட்டவணைகளானது (PTS) (கட்டம் 1 மற்றும் கட்டம் 2) அரச பெறுகை வழிகாட்டிகளின் பிரிவு 4.2.2 இன் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும். மேலும் முதலாவது கூட்டத்தில் PTS இனை அனுமதிப்பது பெறுகை குழுவின் பொறுப்பாகும், இருப்பினும் கம்பனியானது அதனுடன் இணங்கியிருக்கவில்லை. | பெறுகை பாதீடு மற்றும் பெறுகை முறைகள் என்பனவற்றுடன் DPC கூட்டங்களின் போது PTS ஆனது தொடர்ந்து கலந்துரையாடப்படுகின்றது. இருப்பினும், அது கவனக்குறைவால் கூட்டக்குறிப்பு வடிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் லை. | பெறுகை நேர அட்டவணைகளானது கம்பனியினால் தயாரிக்கப்பட வேண்டியதுடன் பெறுகை குழுவானது முதலாவது கூட்டத்தில் மீளாய்வு செய்து முறையாக அனுமதிக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 ஒருங்கிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியானது பொருளாதார அபிவிருத்திக்கான ஒருங்கினைந்த மற்றும் இணக்கமான பளோடெக் கண்டுபிடிப்பு முறைமைக்கு பங்களிப்புச் செய்ய 2020 இல் கூட்டினைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு இலக்கும் அடைய வேண்டிய அவ் விசேட இலக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நோக்கங்கள் என்பன 2021-2025 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட தந்திரோபாயத் திட்டத்தில் விபரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2021-2025 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட ஒருங்கினைணந்த திட்டமானது மதிப்பாய்வு அல்லது இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | SLIBTEC இன் தந்திரோபாய திட்டமானது 5 வருடங்களிற்கு இற்றைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனடிப்படையில் 2025 இலிருந்து மீளாய்வு செய்யப்படுகின்றது. | தந்திரோபாய திட்டத்திலுள்ள விசேட இலக்குகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நோக்கங்கள் என்பன தெளிவாக விபரிக்கப்பட வேண்டும், மேலும், தந்திரோபாய திட்டமானது காலா காலம் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படலும் வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்து அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளும் கணக்காய்வுக்குழுவின் ஊடாக சபைக்கு மாத்திரம் அறிக்கையிடும் உள்ளக கணக்காய்வாளர்களை கொண்டிருக்க வேண்டும். இருப்பினும், கம்பனியானது ஓர் உள்ளக கணக்காய்வாளரை நியமித்திருக்கவில்லை. | பணிப்பாளர்கள் சபையின் 3 உருப்பினர்கள் கணக்காய்வு குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர், மேலும் அவர்களில் ஒருவர் சபையின் தவிசாளராக பதவியாற்றுகின்றார். எனவே, உள்ளக கணக்காய்வாளர் இல்லாவிட்டாலும் கூட கணக்காய்வு குழுவானது கூட முடியும். | கம்பனியானது கணக்காய்வு குழு ஊடாக சபைக்கு நேரடியாக அறிக்கையிடும் ஓர் உள்ளக கணக்காய்வாளரை நியமிக்க வேண்டும். |

### 4.3 கணக்காய்வு குழு

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டிகளினால் தேவைப்படுத்தப்பட்டபடி ஓர் கணக்காய்வு குழுவானது கம்பனியினால் நிறுவப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிலிருந்து அமுலாகும் வண்ணம் வழிகாட்டிகளின் பிரகாரம் கம்பனியானது கணக்காய்வு குழுவினை ஏற்கனவே நியமித்துள்ளது. | கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டிகளின் பிரகாரம் கம்பனியானது ஓர் கணக்காய்வு குழுவை நிறுவ வேண்டும். |

### 4.4 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியானது பாதிடப்பட்ட வருமானக்கூற்று, பாதிடப்பட்ட நிதிநிலமைக்கூற்று மற்றும் பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றினை தயாரித்திருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட வருமானக்கூற்றுக்கள் மற்றும் நிதி நிலமைக்கூற்றுக்கள் என்பன அனுமதிக்கப்பட்ட பாதீடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டன. மீதமாக உள்ள கூற்றுக்கள் அனுமதிக்கப்பட்ட பாதீடுகளின் அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படும். | கம்பனியானது வருடாந்தம் ஓர் பாதிடப்பட்ட வருமானக்கூற்று, நிதிநிலமைக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பனவற்றினை தயாரித்தல் வேண்டும். |